மிராசுதார்கள் தடைசெய்து வருவதாக அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா? அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes. Sir, The Chief Engineer (Irrigation), Madras, who was consulted, has reported that the timely intervention of the lower down ryots of the Piranthiyankarai channel averted the attempt made to cross bund the channel by the ryots in the upper reaches. The Collector of Thanjavur has also been instructed to prevent any cross bunds in the upper reaches of the channel in future.

SRI A. VEDARATHNAM : இந்தமாதிரி பெரிய மிராசுதார்கள் அந்த ஆற்றைக் குறுக்கே தடுத்து அணை போட்டு சில்லரை மிராசுதார்களுக்குத் தண்ணீர் பாய்வதற்கு வசதி இல்லாமல் செய்துவிடுகிறார்கள். இதற்குமுன் எத்தனையோ முறை அரசாங்கத்தினிடம் புகார் செய்யப்பட்டும் இது நிறுத்தப்படவில்லை. ஆகவே இதுபோல் இனி நடக்காமல் இருக்கப் பார்த்துக்கொள்வார்களா? அல்லது போதுமான அளவுக்குத் தண்ணீர் விடுவதற்காவது வசதி செய்யப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தச் சம்பவத்திற்குக் காரணம் சின்ன மிராசுதார்களா, பெரிய மிராசுதார்களா என்று எனக்குத் தெரியாது. ரயத்துகள் என்றுதான் இங்கே இருக்கிறது. இந்தமாதிரி நடைபெறக்கூடாது என்று கலெக்டருக்கு உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது. இதன் நகலும் பிரதம எஞ்ஜினியருக்குப் போயிருக்கிறது. ஆகையால் இதுமாதிரி நடக்காது என்று சொல்கிறேன்.

Tube wells

*236 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1960-ல் வடாற்காடு மாவட்டத்தில் ஆற்றுநீர்க் குழாய் கிணறுகள் (Tube wells) எங்கெங்கே தோண்டப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A river pumping scheme at Kadalady village on Cheyyar river is under investigation by the Agriculture Department. No such schemes are under the consideration of the Public Works Department.

SRI S. M. ANNAMALAI : இந்த ரிவர் பம்பிங் ஸ்கீம் வடாற்காடு ஜில்லாவில் அதிகமாக ஏற்படாததற்குக் காரணம் பாலாறு பேசின் ரூல் என்கிற விதி அமுலில் இருப்பதுதான். அந்த ஜில்லா வளம் பெறுவதற்கு வேறு எந்தவிதமான வசதியும் இல்லாத காரணத்தினால் இந்த பாலாறு பேசின் ரூலை அடியோடு ரத்து செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

28th January 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பாலாறு ஊற்றுக்கும் ஒரு வரம்பு இருக்கிறது. ஆகையால்தான் அதைக் கட்டுப் படுத்தும் விதிகள் இருக்கின்றன. இருந்தபோதிலும் கொஞ்ச காலத்திற்கு முன்பு இந்த விதிகளை எவ்வளவுதூரம் சாத்தியப் படுமோ அவ்வளவுதூரம் தளர்த்தியிருக்கிறோம். ஆனால் இவ்விதியை அடியோடு ரத்து செய்வதாக அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

Beggars

* 237 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பிச்சைக் காரர்களை பாதுகாக்க திட்டம் உண்டா?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ( ) Yes. Sir.

(இ) It is proposed to open two 'Special Homes' for old, infirm, diseased and disabled beggars and two 'Work Houses' for able-bodied beggars in this State at an estimated cost of Rs. 10 lakhs during the Third Five-Year Plan period.

SRI S. M. ANNAMALAI : நம்முடைய மாநிலத்தில் எத்தனை பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள் என்று சர்க்கார் கணக்கெடுத் திருக்கிறார்களா? ஆண்டுதோறும் அதிகமாகிவருகிறதா? குறைந்துவருகிறதா? ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகி வந்தால் அதற்கு அடிப்படையான காரணம் என்ன என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றிய தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை.

Otteri Nullah

* 238 Q.—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the amount sanctioned to improve the Otteri Nullah in the Puraswalkam-Perambur area in the City of Madras; and

(b) the amount spent in the year 1959-60?

THE HON. SRI P. KAKKAN : (a) Rs. 70,000.

(b) Rs. 40,972.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த ஓட்டேரி நல்லா என்கிற தண்ணீர் கால்வாயில் ஒரு பகுதியை அரசாங்கத்தார் முன்வந்து ரிப்பேர் செய்தாலும்கூட இன்னும் ஒரு பெரிய பகுதி அந்தமாதிரியாகச் சீர்திருத்தம் செய்யும்படியான நிலைமையில் இருக்கிறது. அதையும் சீர்திருத்துவதற்கு அரசாங்கம் யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.